அனுப்புநர்
உறுப்பினர்–செயலர்,
சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,
1, காந்தி–இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.

பெறுநர்
ஆணையாளர்
திருவேற்காடு நகராட்சி
திருவேற்காடு

---

**கடித எண். பிசி1/18393/2014** **தேதி 06.06.2017**

ஐயா,

பொருள்: செ.பெ.வ.குழுமம் – உத்தேச தளப்பரப்புடன் கூடிய திட்ட அனுமதி – நில அளவை எண்.105/3 A மற்றும் 106/11, ராஜீவ் நகர், நூம்பல் கிராமம், சென்னையில் 8 பிளாக்குகள் கொண்ட தொகுப்புக்கட்டிடம், வாகன நிறுத்தும் தளம் + 4 தளங்களுடன் கூடிய பிளாக்கு A (48 குடியிருப்புகள்), பிளாக்கு B (48 குடியிருப்புகள்), பிளாக்கு C (40 குடியிருப்புகள்), பிளாக்கு D (40 குடியிருப்புகள்), பிளாக்கு E (36 குடியிருப்புகள்), பிளாக்கு F (24 குடியிருப்புகள்), பிளாக்கு G (LIG – 32 குடியிருப்புகள்), பிளாக்கு H (LIG – 32 குடியிருப்புகள்), மற்றும் பிளாக்கு I வாகன நிறுத்தும் தளம் + 3 தளங்களுடன் கூடிய மனமகிழ் மன்றம், நீச்சல்குளம், உடற்பயிற்சி கூடம், வீட்டு உபயோக திரையரங்கம் உள் விளையாட்டுகூடம் போன்ற வசதிகளுடன் கூடிய கட்டிடம், மொத்தம் 300 குடியிருப்புகள் (LIG 64 குடியிருப்புகள் உட்பட) கொண்ட குடியிருப்பு கட்டிடம் – ஒப்பளிக்கப்பட்டிருப்பது – தொடர்பாக.

பார்வை:

1. சிறப்புக் கட்டிட பிரிவு எண்.1001/2014 நாள் 08.12.2014 அன்று கிடைக்கப் பெற்ற திட்ட அனுமதி விண்ணப்பம்.
2. அரசாணை (பல்வகை) எண் 163, வீ.வ,மற்றும் ந.வ.துறை ந.வ. (ந.வ.4(1) துறை நாள் 09.09.2009.
3. அரசாணை (பல்வகை) எண் 86, வீ.வ,மற்றும் ந.வ.துறை ந.வ. (ந.வ.4(1) துறை நாள் 28.3.2012.
4. அரசானை பலவகை எண் 97 நாள் 7.7.2015.
5. வழிகாட்டி மதிப்பீடு கோருதல் குறித்து சார்பதிவாளர், குன்றத்தூர், சென்னை 69 அவர்களுக்கு இதே எண் கொண்ட இவ்வலுவலக கடித நாள் 29.10.2015, 13.03.2017.
6. சார்பதிவாளர், குன்றத்தூர் அவர்களின் கடித நாள் 5.11.15, 15.03.2017.
7. வளர்ச்சிக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள் கோருதல் குறித்து விண்ணப்பதாரருக்கு அனுப்பிய இதே எண் கொண்ட இவ்வலுவலக கடித நாள் 30.9.15, 7.12.15, 24.03.2017.
8. விண்ணப்பதாரரிடமிருந்து கடிதம் கிடைக்கப் பெற்ற நாள் 29.1.16, 04.04.2017.
9. திறந்தவெளி இடத்திற்கான பகுதியினை தானப்பத்திரம் எண் 4218/2016 நாள் 10.3.2016 மூலமாக செ.பெ.வ.குழுமத்திற்கு ஒப்படைத்த நாள் 13.4.2016.
10. இணைப்பு சாலை இடத்திற்கான பகுதியினை தான பத்திர எண் 4217/2016 நாள் 10.3.2016 மூலமாக செ.பெ.வ. குழுமத்திற்கு ஒப்படைத்த நாள் 13.4.2016.
11. நெடுஞ்சாலைத்துறை கடித எண் 1082/2014 இவ.சு–1/ நாள் 29.04.2015 மற்றும் 5.5.2014.

****

நில அளவை எண்.105/3 A மற்றும் 106/11, ராஜீவ் நகர், நூம்பல் கிராமம், சென்னையில் 8 பிளாக்குகள் கொண்ட தொகுப்புக்கட்டிடம், வாகன நிறுத்தும் தளம் + 4 தளங்களுடன் கூடிய பிளாக்கு A (48 குடியிருப்புகள்), பிளாக்கு B (48 குடியிருப்புகள்), பிளாக்கு C (40 குடியிருப்புகள்), பிளாக்கு D (40 குடியிருப்புகள்), பிளாக்கு E (36 குடியிருப்புகள்), பிளாக்கு F (24 குடியிருப்புகள்), பிளாக்கு G (LIG – 32 குடியிருப்புகள்), பிளாக்கு H (LIG – 32 குடியிருப்புகள்), மற்றும் பிளாக்கு I வாகன நிறுத்தும் தளம் + 3 தளங்களுடன் கூடிய மனமகிழ் மன்றம், நீச்சல்குளம், உடற்பயிற்சி கூடம், வீட்டு உபயோக திரையரங்கம் உள் விளையாட்டுகூடம் போன்ற வசதிகளுடன் கூடிய கட்டிடம், மொத்தம் 300 குடியிருப்புகள் (LIG 64 குடியிருப்புகள் உட்பட) கொண்ட குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்கு, பார்வை 1ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம், பார்வை–7ல் கண்டுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்பளிக்கப்படுகிறது.

...2

2. விண்ணப்பதாரர் பார்வை 7–இல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு, கீழ்கண்ட கட்டணங்களைச் செலுத்தியுள்ளார்கள்.

| | ஏற்கனவே இதே கோப்பு எண்ணில் 30.9.15 மற்றும் 7.12.15 நாள் கடிதத்தின் படி கீழ்கண்ட கட்டணங்களைச் செலுத்தியுள்ளார் | மீதமுள்ள கட்டணங்களை 24.3.17 நாள் கடிதத்தின் பட கீழ்கண்ட கட்டணங்களை செலுத்தியுள்ளார் |
|---|---|---|
| வளர்ச்சிக் கட்டணம் | ரூ.4,06,020/– ரசீது எண். B00135 நாள்29.01.16 | இல்லை |
| சூர்ந்தாய்வுக் கட்டணம் | ரூ.1,04,240/– ரசீது எண் . B 00135 நாள்9.01.16 | ரூ.9760/– ரசீது எண். B 004053 நாள்30.03.17 |
| வரன்முறைக் கட்டணம் | ரூ.9,32,000/– ரசீது எண். B 00135 நாள்29.01.16 | இல்லை |
| திறந்தவெளிக் கட்டணம் | இல்லை | இல்லை |
| கட்டிடத்திற்கான காப்புறுதிக் கட்டணம்: | ரூ.73,17,000/– ரசீது எண். B 00135 நாள்29.01.16 | ரூ.6,83,000/– B 004248 நாள்18.04.17 |
| சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரியத்திற்கான உள்கட்டமைப்பு வளர்ச்சி கட்டணம் | ரூ.3,12,000/– ரசீது எண். B 00135 நாள்29.01.16 | ரூ.30/– B 004053 நாள்30.03.17 |
| அறிவிப்புப் பலகைக்கான வைப்புநிதி | ரூ.10,000/– ரசீது எண். B 00135 நாள்29.01.16 | இல்லை |
| உள்கட்டமைப்பு வசதி கட்டணம் | ரூ.1,00,10,000 ரசீது எண் B 00135 நாள்29.01.16 | ரூ.470/– B 004053 நாள்30.03.17 |
| ஊக்கத் தளப்பரப்பு கட்டணம் | ரூ.1,75,54,000 ரசீது எண் B 00136 நாள்29.01.16 | இல்லை |
| மொத்தம் | | ரூ.3,72,24,520/– |

3. உத்தேச திட்டத்திற்குக் கட்டிட அனுமதி வழங்குவதற்கு முன்னால், குடிநீர் வசதிகளுக்கான வடிவமைப்புகளை உறுதி செய்து கொள்ளுமாறு உள்ளாட்சி அமைப்பு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. மேல்நோக்கு வடிகட்டு கழிவு நீர்த்தொட்டியின் பராமரிப்பை முதலில் கட்டிட முனைவோரே மேற்கொள்ள வேண்டும். குடியிருப்போர் சங்கம் உருவாக்கப்பட்ட பின் அதனிடம் பொறுப்பை ஒப்படைக்கும் வரையில் கட்டிட முனைவோரே அதைப் பராமரிக்க வேண்டும்.

5. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டியுள்ளபடி மழை நீர் சேகரிப்பு அமைப்பைத் திருப்திகரமாக அமைக்காதிருப்பது, ஒப்புதலளிக்கப்பட்ட வரை படத்திலிருந்தும், வளர்ச்சி விதிமுறைகள் விதிகளுக்கும் மீறிய செயலாகக் கருதப்படும், அதன்மீது அமலாக்க நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

6. கிணறுகளும், மேல் நிலைத்தொட்டிகளும் கழிவு நீர்த் தொட்டிகளும், கொசுத் தொல்லைகள் இல்லாவண்ணம் சுகாதார முறையில் பாதுகாப்பாக மூடப்பட்டிருக்க வேண்டும்.

7. எண். பி / சிறப்புக் கட்டிடம் / 169 / A to J / 2017 நாள் 06.06.2017 என எண்ணிடப்பட்ட இரு ஒப்பளிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் அனுப்பப்படுகின்றன. இத்திட்ட அனுமதி 06.06.2017ல் இருந்து 05.06.2022 வரை செல்லுபடியாகும்.

8. இந்த ஒப்பளிப்பு இறுதியானது அல்ல. உள்ளாட்சி அமைப்புச் சட்டத்தின் கீழ் கட்டிட அனுமதி பெறுவதற்கு, விண்ணப்பதாரர் திருவேற்காடு நகராட்சியை அணுக வேண்டும். கட்டிட அனுமதி பெற்ற பிறகு தான் கட்டிடத்தைக் கட்டத் தொடங்கலாம்.

9. நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971ன் வகைப்பாட்டிற்கு ஏற்ப கட்டிடங்களுக்கு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது: அதில் கட்டமைப்பு உறுதிப்பாடு மற்றும் கட்டுமானத்தின்போது பாதுகாப்பு போன்றவை இடம் பெறவில்லை. எனினும் இந்த வகையான அம்சங்கள் உள்ளாட்சித் துறை விதிகளில் உள்ளது.

கட்டிடத்தின் கட்டமைப்பு உறுதிபாட்டை பொறுத்தவரை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி சட்டம் 1920ல் கட்டிட விதியில் கூறியுள்ளது போல் அதாவது பெருநகர சென்னை நகர மாநகராட்சி சட்டம் 1919, தமிழ்நாடு மாவட்ட நகராட்சி விதிகள், தமிழ்நாடு ஊராட்சி விதிகள், இது உள்ளாட்சிதுறை அதிகாரத்தின் கீழ் வருகிறது. தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 மூலம் வழங்கப்படும் திட்ட அனுமதியில் கட்டமைப்பு உறுதிப்பாடு இடம் பெறவில்லை. இருப்பினும், கட்டிடத்தின் தொடர் கட்டமைப்பு உறுதிப்பாடு மற்றும் கட்டுமானத்தின் போது பாதுகாப்பு போன்றவைகள் விண்ணப்பதாரர் / அபிவிருதியாளர் / பொது அதிகார நபர் மற்றும் வரைபடத்தில் கையொப்பமிட்டுள்ள கட்டமைப்பு பொறியாளர் / உரிமம் பெற்ற நில அளவையர் / கட்டிட வடிவமைப்பாளர் அவர்களின் பொறுப்பாகும்.

10. செ.பெ.வ.குழுமம் சட்டபூர்வமாக திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு, விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையத்தில் குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன்மேல் வேறு யாரும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய செ.பெ.வ. குழுமம் பொருத்தமான அமைப்பு அல்ல.

11. கட்டிடம் கட்டப்படுவதைக் கண்காணிக்குமாறும், அது ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின்படியே கட்டப்படுகிறது என்பதை உறுதி செய்து கொள்ளும்படியும், அவ்வாறில்லாமல், ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டப்பட்டால் உடனுக்குடனேயே அமலாக்க நடவடிக்கை எடுக்குமாறும் உள்ளாட்சி அமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

12. உத்தேச திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள நீச்சல் குளத்திற்கு அரசாணை எண்.97, MAWS Dept. நாள் 07.07.2015ல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும்.

13. நீச்சல்குளம் கட்டுவதற்கான செயல் குழுமத்திலிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழை, கட்டிட முழுமை சான்றிதழ் விண்ணப்பிக்கும்போது சமர்பிக்கவேண்டும்.

தங்கள் உண்மையுள்ள,

07/6/17

உறுப்பினர்– செயலருக்காக.

07/6/17

இணைப்பு:

1. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின் 2 படிகள்.
2. திட்ட அனுமதியின் 2 படிகள்.

நகல்:

1. அர்பன்ட்ரி இன்ப்ராஸ்டரக்சர்ஸ் (பி) லிமிடெட்
   6வது தளம், குட்ஷெபட் ஸ்கொயர், எண் 86, K.H. சாலை,
   நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
2. உறுப்பினர், உரியதுறை (Appropriate Authority)
   108, உத்தமர் காந்தி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 034.
3. வருமானவரி ஆணையர், 168, உத்தமர் காந்தி சாலை,
   நுங்கம்பாக்கம், சென்னை 600 034.
4. துணைதிட்ட அமைப்பாளர், செயலாக்கப்பிரிவு (மத்திய பிரிவு),
   செ.பெ.வ.குழுமம், சென்னை–8.

Chennai Metropolitan Development Authority
PLANNING PERMIT
(Sec 49 of T & C. P. Act 1971)

PERMIT No. 11413

B/SPl-Bldg/169 A to J/2017

Date of Permit 06/06/2017

File No. BC1/18393/14

Name of Applicant with Address M/S. Urban Tree Infrastructures Pvt Ltd
6th floor, Good Shepered Square
No. 86, K.H. Road,
Nungambakkam, Ch-34.

Date of Application 08/12/14

Nature of Development : ~~Layout/Sub-division of Land~~/Building construction/~~Charge in use of Land/Building~~ Proposed

Site Address of Group development of 8 blocks of Stilt + 4 floors Residential building (including 2-blocks of LIG Block with 64 D/Us) with 300 dwelling units and Amenity

Division No Block Stilt + 3 floors with Swimming pool at Rajiv Nagar, Noombal village comprised in S.No. 105/3A & 106/11 of Noombal village

Development Charge paid Rs 406020 Challan No B00135 Date 29/1/16

PERMISSION is granted to the layout/sub-division of land/building construction/change in use of land/building according to the authorised copy of the plan attached hereto and subject to the condition overleaf.

3. The permit expires on 05/06/2022 the building construction work should be completed as per plan before the expiry date. If it is not possible to Complete the construction, request for renewing the planning permit should be submitted to Chennai Metropolitan Development Authority before the expiry date. If it is not renewed before the said date fresh Planning Permission application/has to be submitted for continuing the construction work when the Development Control Rules that may be currently in force at that time will be applicable. If the construction already put up is in deviation to the approved plan and in violation of rules. Planning permit will not be renewed.

07/6/17

For MEMBER SECRETARY

2/6/17 2/6/17

திருவேற்காடு நகராட்சி ஆணையாளர் அவர்களின் நடவடிக்கைகள்
சென்னை600 077

முன்னிலை: திரு.க.கிருஷ்ணமூர்த்தி,எம்.ஏ.,

க.உ.எண். 191 /2017 நாள் 20-07-2017

மு.மு.எண்.949/2017

**பொருள்**: திட்ட அனுமதி-திருவேற்காடு நகராட்சி-நூம்பல் கிராமம்-புல எண். 105/3A மற்றும் 106/11, ராஜீவ்நகர், சென்னையில் 8 பிளாக்குகள் கொண்ட தொகுப்புக்கட்டிடம், வாகன நிறுத்தும் தளம் + 4 தளங்களுடன் கூடிய பிளாக்கு A (48 குடியிருப்புகள்), பிளாக்கு B (48 குடியிருப்புகள்), பிளாக்கு C (40 குடியிருப்புகள்), பிளாக்கு D (40 குடியிருப்புகள்), பிளாக்கு E (36 குடியிருப்புகள்), பிளாக்கு F (24 குடியிருப்புகள்), பிளாக்கு G (LIG-32 குடியிருப்புகள்), பிளாக்கு H (LIG-32 குடியிருப்புகள்), மற்றும் பிளாக்கு I வாகன நிறுத்தும் தளம் + 3 தளங்களுடன் கூடிய மனமகிழ் மன்றம், நீச்சல் குளம், உடற்பயிற்சி கூடம், வீட்டு உபயோக திரையரங்கம் உள் விளையாட்டுக்கூடம் போன்ற வசதிகளுடன் கூடிய கட்டிடம், மொத்தம் 300 குடியிருப்புகள் (LIG 64 குடியிருப்புகள் உட்பட) கொண்ட குடியிருப்பு கட்டிடம் கட்ட திட்ட அனுமதி வழங்கியுள்ளது-நகராட்சி அனுமதி வழங்க அபிவிருத்திக் கட்டணங்கள் செலுத்த கோருதல்-சம்மந்தமாக.

பார்வை:

1) உறுப்பினர்-செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமம், தாளமுத்து நடராஜன் மாளிகை, சென்னை-8 அவர்களின் கடிதம் எண். பிசி1/1839/ 2014, நாள் 6-6-2017.
2) இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.949/2017/எப்1, நாள் 23-62017.

------

**உத்திரவு:-**

திருவேற்காடு நகராட்சி-நூம்பல் கிராமம்-புல எண். 105/3 A மற்றும் 106/11, ராஜீவ்நகர், சென்னையில் 8 பிளாக்குகள் கொண்ட தொகுப்புக்கட்டிடம், வாகன நிறுத்தும் தளம் + 4 தளங்களுடன் கூடிய பிளாக்கு A (48 குடியிருப்புகள்) பிளாக்கு B (48 குடியிருப்புகள்), பிளாக்கு C (40 குடியிருப்புகள்), பிளாக்கு D (40 குடியிருப்புகள்), பிளாக்கு E (36 குடியிருப்புகள்), பிளாக்கு F (24 குடியிருப்புகள்), பிளாக்கு G (LIG-32 குடியிருப்புகள்), பிளாக்கு H (LIG-32 குடியிருப்புகள்) மற்றும் பிளாக்கு I வாகன நிறுத்தும் தளம் + 3 தளங்களுடன் கூடிய மனமகிழ் மன்றம், நீச்சல் குளம், உடற்பயிற்சி கூடம், வீட்டு உபயோக திரையரங்கம் உள் விளையாட்டுக்கூடம் போன்ற வசதிகளுடன் கூடிய கட்டிடம், மொத்தம் 300 குடியிருப்புகள் (LIG 64 குடியிருப்புகள் உட்பட) கொண்ட குடியிருப்பு கட்டிடம் கட்ட உறுப்பினர்-செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமம் அவர்களால் திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத்திற்கு நகராட்சியால் தற்போது அனுமதி அளிக்கப்படுகிறது.

இந்த அனுமதியானது 20-07-2017 முதல் 19–07–2020ந் தேதி வரை மூன்று ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும். கட்டிட அனுமதிக்கட்டணம் ரூ.70,56,710/- (எழுத்தால் ரூபாய் எழுபது லட்சத்து ஐம்பத்தாறாயிரத்து எழுநூற்று பத்து மட்டும்) வங்கிவரைவோலை எண்.062132, நாள் 14–07–2017 மற்றும் தொழிலாளர் நல வாரியத்திற்கான 1% தொகை ரூ.34,73,120/- (எழுத்தால் ரூபாய் முப்பத்து நான்கு லட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து நூற்று இருபது மட்டும்) வங்கிவரைவோலை பெறப்பட்டுள்ளது. மேலும், முன்னாள் படைவீரர் நலன் (ARMED FORCE FLAG DAY FUND, THIRUVALLUR) என்ற முகவரிக்கு ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வங்கிவரைவோலை பெறப்பட்டுள்ளது.

<u>நிபந்தனைகள்</u>

1. கட்டிடத்தின் முன் பக்கத்தில் 10 அடிக்கு குறையாமலும், பின்பகுதியில் 10 அடிக்கு குறையாமலும், இரு பக்கங்களிலும் வரைபடத்தில் குறிப்பிட்டவாறு இடைவெளி விடப்பட்டிருக்க வேண்டும்.
2. தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 மற்றும் 1994ம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டத்தின்படி சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழும விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.
3. அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ, அல்லது இம்மனுதாரருக்கு சம்பந்தமில்லாத வேறு இடங்களிலோ ஆக்கிரமனம் செய்வது கூடாது.
4. கட்டிட வேலைகள் நடக்கும் பொழுதோ அல்லது வேறு நேரங்களிலோ நகராட்சியிலிருந்து ஆய்வு செய்யவரும் அதிகாரிகளக்கு அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களை காண்பிக்க வசதியாக வேலை நடக்குமிடங்களில் மேற்படி வரைபடங்களை வைத்திருத்தல் வேண்டும்.
5. இந்த உத்தரவில் அனுமதிக்கப்பட்ட கால வரையரைக்குள் கட்டிடம் கட்ட முடிக்கப்படாவிடில் அனுமதியை மீண்டும் புதியதாக மனு கொடுத்து அனுமதி பெறவேண்டும்.
6. அனுமதித்த வரைபடத்தில் கூடுதலோ அல்லது மாறுதல் ஏதேனும் செய்து காட்ட வேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் ஆணையாளருக்கு விண்ணப்பம் செய்து உத்திரவு பெற்ற பிறகு தான் மாறுதல் கட்டிடம் கட்ட வேண்டும்.
7. கட்டிடம் கட்ட உத்திரவு பொய்பதிவுகள் மூலம் பெற்றதாகவோ அல்லது ஏதேனும் கட்டிட விதிகளுக்கு புறம்பாகவோ, பெற்றதாயிருந்தால் மேற்படி உத்திரவை ரத்து செய்ய ஆணையாளருக்கு உரிமை உண்டு.
8. புதியதாக கட்டப்படும் கட்டிட இடங்கள் எந்த நேரத்திலும் சுத்தமான பொது சுகாதாரக்கேடு விளைவிக்காத வகையில் இருத்தல் அவசியம்.
9. மனுதாரர் கட்டிடத்தை கட்டி முடித்த பின்பு இவ்வலுவலகத்திலிருந்து சான்றிதழ் பெற்ற பின்பே குடிபுக வேண்டும்.
10. கட்டிடத்திலிருந்து வெளிவரும் கழிவு நீரை மனுதாரர் தன் சொந்த இடத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்து அவைகளை அப்புறப்படுத்தும் வகையில் வடிகால்களும் கழிவு நீர்த்தொட்டிகளும் அமைத்துக்கொள்ள வேண்டும்.
11. கட்டிடம் தொழிலகங்களுக்காகவோ அல்லது வேறு தொழிலாளர்கள் வேலை செய்ய வேண்டி இடங்களுக்காகவோ கட்டப்படவிருந்தால் அவைகளுக்கு மாவட்ட சுகாதார அலுவலரிடமிருந்து தொழிலகங்களின் ஆய்வாளரிடமிருந்து மற்றும் உறுப்பினர்-செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமம் ஆகியோரிடமிருந்து அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.
12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படியே கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு இந்நகராட்சியிலிருந்து சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டும்.
13. கட்டிட வேலை முடிந்த பின்போ அல்லது குடியேறிய பின்னரோ 15 தினங்களுக்குள்ளாக ஆணையாளருக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.
14. வரைபடத்தில் கண்டுள்ளவாறு மழைநீர் சேமிப்பு கட்டமைப்பு ஏற்படுத்த வேண்டும். தவறினால், விதிமுறைகளை மீறி கட்டிடம் கட்டப்பட்டதாக கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஆணையாளர்
திருவேற்காடு நகராட்சி

20-7-2017 20/7/2017

பெறுநர்

மெஸர்ஸ். அர்பன்டரி இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் (பி) லிமிடெட்,
6வது தளம், குட்ஷெபட் ஸ்கொயர்,
எண்.86,K.H.சாலை,நுங்கம்பாக்கம்,
சென்னை-600034.